சார்பு நீதிமன்றம், திருமயம்.
முன்னிலை – திரு. G.அருண்குமார், B.Sc., B.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, புதுக்கோட்டை,
சார்பு நீதிமன்றம் திருமயம்(மு.கூ.பொ).
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் தேதி புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 4 ஆம் நாள்)

**அசல் வழக்கு எண். 344/2023**

**CNR.No.TNPD19001061-2023**

1. திருமதி. அமுதா
2. திருமதி. சாந்தி
3.திருமதி. சுமதி
4. செல்வம்
5. திருமதி. மீனாள்
6. ஆண்டியப்பன் ...வாதிகள்

/எதிர்/

1. கலைச்செல்வி
2. ஜெயசித்ரா
3. நாராயணராஜா
4. மணிவண்ணன் .....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பு 06.03.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.அபிராமி மௌனிகா அவர்கள் ஆஜராகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. சோலை. முத்தையா அவர்கள் மூலம் முன்னிலையாகி பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சம்மன்சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலும், ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவாச்சொத்துக்களில் வாதிக்குரிய 2/3 கூட்டுப் பாகவீத சொத்தினை பிரித்து நயஇளப்பம் செய்து தனித்த சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும், தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 2/3 பாகவீதத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகள் ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து சொத்தினை கலந்து பிரித்து தர ஏதுவாக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வழக்குரையின் சுருக்கம்:**

தாவாச் சொத்து இந்நீதிமன்ற நில அதிகார வரம்புக்குட்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, ராங்கியம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவாச் சொத்து பாப்பாத்தி அம்மாளுக்கு சொந்தமான சொத்தாகும். பாப்பாத்தி அம்மாள் கடந்த 21.11.1989 ம் தேதியில் காலமாகிவிட்டார். அவர் இறப்புக்கு பின்னர் அவரது வாரிசுகளான நாராயணப்பிள்ளை, பத்மாவதி, ஆண்டியப்பன், அண்ணாமலை ஆகியோர்கள் வாரிசு முறையில் சொத்தினை சுவாதீனம் அடைந்து அனுபவத்தில் இருந்து வருகிறார்கள். இந்நிலையில் நாராயணப்பிள்ளை கடந்த 08.11.1997 ம் தேதியில் காலமாகிவிட்டார். நாராயணப்பிள்ளை இறப்புக்குப் பின்னர் அவரது வாரிசுகளான பத்மாவதி, ஆண்டியப்பன், அண்ணாலை ஆகியோர் தாவாசொத்தினை சுவாதீனம் அடைந்து வருகிறார்கள். கடந்த 07.04.2007 ம் தேதி அண்ணாமலை இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகளும், பத்மாவதி, ஆண்டியப்பன் ஆகியோர் தாவாச் சொத்தினை சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்த நிலையில் பத்மாவதி கடந்த 17.11.2018 ம் தேதியில் இறந்துவிட்டார். பத்மாவதி இறந்த பிறகு அவரது வாரிசுகளான 1 முதல் 5 வாதிகளும் மற்றும் ஆண்டியப்பன் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்தினை இது நாள் வரை பாகம் பிரித்துக் கொள்ளாமல் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். தாவாச் சொத்தில் 1 முதல் 3 வரை உள்ள பிரதிவாதிகளின் தகப்பனார் அண்ணாமலைக்கு முழு உரிமை கிடையாது. ஆனால் அண்ணாமலை 4 ம் பிரதிவாதி மணிவண்ணன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உள்ள பங்குரிமை உள்ள சொத்தினையும் சேர்த்து கிரைய

பாராதீனங்கள் செய்து இருந்தாலும், அது முற்றிலும் செல்லத்தக்கது அல்ல. வாதிகளுக்குரிய 2/3 பாக வீதச் சொத்தினை நயஇளப்பம் சரிகட்டி பிரித்து, தனித்த சுவாதீனத்தை ஒப்படைக்கும்படி வாதிகள் நேரிலும், பஞ்சாயத்தார்கள் மூலமும் கடந்த 05.05.2022ம் தேதியில் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு மறுத்துள்ளார்கள். மேலும் வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் கூட்டாக அனுபவம் செய்ய விரும்பவில்லை. எனவே வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. சோலை. முத்தையா அவர்கள் மூலம் முன்னிலையாகி பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சம்மன்சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலும், ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகிறார்கள்.

4) வாதி தரப்பில் வாதி திரு.அமுதா வா.சா.1. ஆக விசாரனை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5) தீர்வு</u>:

(i) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. அசல் வழக்கு சொத்து இந்த நீதிமன்றத்தின் நில வரையறைக்குள் உள்ள திருமயம் தாலுகா, ராங்கியம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) அசல் வழக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு சொத்துக்கள் பாப்பாத்தி அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என காட்டுவதற்கு வாதிகள் தரப்பில் பட்டா எண். 511 கூறிய சிட்டா ஆன்லைன் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாப்பாத்தி அம்மாள் 21.11.1989 ஆம் ஆண்டு காலமாகிவிட்டார் என்பதற்கு வாதிகள் தரப்பில் அவருடைய இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தினத்தில் இறந்து உள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேற்படி பாப்பாத்தி அம்மாவின் கணவர் நாராயண பிள்ளை கடந்த 8.11.1997 ஆம் தேதி இறந்து

விட்டார் என்பதற்கான இறப்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மேற்படி நாராயணப் பிள்ளையின் வாரிசுகளாக பத்மாவதி, ஆண்டியப்பன், அண்ணாமலை ஆகிய 3 நபர்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டதாக வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி 3 நபர்களும் வழக்கு சொத்தினை அடைந்து அனுபவம் செய்து வந்ததாகவும், மேலே குறிப்பிட்ட அண்ணாமலை கடந்த 07.04.2007 ஆம் தேதி இறந்து விட்டார். மேற்படி அண்ணாமலையின் வாரிசுகள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆகும். மேற்படி பத்மாவதி என்பவர் 17.11.2018 ஆம் தேதி இறந்து விட்டார். அவருடைய வாரிசுகள் தான் 1 முதல் 5 வாதிகள் ஆகும். நாராயணப் பிள்ளையின் மற்றொரு வாரிசான ஆண்டியப்பன் என்பவர் 6 ம் வாதியாக இருக்கிறார்.

(iv) வாதிகளுடைய வழக்கு படி வழக்கு சொத்து பாப்பாத்தி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. மேற்படி பாப்பாத்தி அம்மாள், நாராயண பிள்ளை இறந்த பின்னிட்டு அவர்களுடைய வாரிசுதாரர்கள் அனைவருக்கும் கூட்டு உரிமை, கூட்டுப் பாத்தியம் பாத்தியப்பட்டுள்ளது. ஒரு வாரிசான அண்ணாமலை மட்டும் முழு சொத்துக்களையும் கிரையம் செய்து கொடுப்பதற்கு உரிமை இல்லை என்பது தெரிய வருகிறது. 4–ம் பிரதிவாதி மணிவண்ணன் வழக்கு சொத்தினை கிரயம் வாங்கிய நபர் ஆவார். மேற்படி அண்ணாமலையின் வாரிசுதாரர்கள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆவார்கள். எனவே, ஒரு பங்குதாரரின் கூட்டு உரிமை சேர்த்து ஒரு பங்குதாரர் முழு சொத்து இருக்கும் கிரயம் பதிவு செய்து கொடுக்க இயலாது. எனவே வாதிகள் உண்மைஹயுள்ள வழக்கு சங்கதிகளை ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தின் அடிப்படையில் நிரூபணம் செய்துள்ளார்கள் என முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக, வாதிகளின் வழக்கை அனுமதித்து வழக்கு சொத்தில் வாதிகளுக்கு 2/3 கூட்டு பாகம் உள்ளது என முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு

இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18–ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- G.அருண்குமார்,
சார்பு நீதிபதி,
திருமயம் (மு.கூ.பொ).

<u>வாதி தரப்பு சாட்சி</u>:

வா.சா.1 – திருமதி. அமுதா

<u>வாதி தரப்பு சான்றாவணம்</u>:

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | பட்டா எண்.511 அடங்கல் | ஆன்லைன் நகல் |
| வா.சா.ஆ.2 | வாதியின் மாமியார் பாப்பாத்தி இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | வாதியின் மாமனார் நாராயணப்பிள்ளை இறப்பு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.4 | வாதியின் கணவரின் வாரிசுச் சான்றிதழ் | ஆன்லைன் நகல் |
| வா.சா.ஆ.5 | தாவா சொத்து குறித்த வில்லங்கச்சான்று | நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, மற்றும் சான்றாவணம்</u> – இல்லை.

ஒம்/- G.அருண்குமார்,
சார்பு நீதிபதி,
திருமயம் (மு.கூ.பொ).